# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூலை 01, 2023

Weekly E-paper ● July 1, 2023




## பலித்தவரை பார்ப்பனியம்...!

சுப.வீரபாண்டியன்

## மோடியின் அமெரிக்கப் பயணம் ஓர் அலங்கோலம்!

மா.உதயகுமார்

## அறங்காவல் துறையின் கீழ் தில்லை..?

தலையங்கம்

## பெரியாருக்குச் செய்யும் துரோகம்...!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூலை 01, 2023 Weekly E-paper ● July 1, 2023


# பலித்தவரை பார்ப்பனியம்...!

சுப.வீரபாண்டியன்

கடந்த ஒரே வாரத்தில், இரண்டு ஆணைகள் வெளியிடப்பட்டு, இரண்டுமே திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன. ஒன்று, ஆளுநர் மாளிகையில் இருந்து நேரடியாக வெளிவந்தது. இன்னொன்று, அவரிடமிருந்து மறைமுகமாக ஏவி விடப்பட்டது!

சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், யாரும் கருப்பு உடையுடன் வரக்கூடாது என்று ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டது. அடுத்த நாளே அது திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதேபோல, அல்லது அதைவிட மிகப்பெரிய அளவிலான இன்னொரு அறிவிப்பு 29 ஆம் தேதி இரவு 7 மணிக்கு, அமைச்சர் செந்தில் பாலாஜியை அப்பதவியிலிருந்து நீக்கம் செய்வதாக ஆளுநர் அறிவித்தார். ஐந்தே மணி நேரங்களில் அதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்!



இப்படி அடாவடியாக அறிவிப்பதும், பிறகு அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்வதும் வெட்கத்திற்குரிய செயல்கள் இல்லையா என்று நாம் கருதலாம். ஆனால் ஆளுநர் அதற்கெல்லாம் வெட்கப்படவில்லை. வெட்கப்பட்டால் ஆளுநராக இருக்க முடியாதோ, என்னவோ!

தந்தை பெரியார்தான் சொல்வார் - தனக்கு ஒரு ஆபத்து வந்தால், பார்ப்பனர்கள் அதை நாட்டுக்கே வந்த ஆபத்து என்று சொல்வார்கள். அதனை முதலில் எதிர்த்துப் பார்ப்பார்கள். முடியவில்லை என்றால், சுவடு தெரியாமல் விட்டுவிடுவார்கள். பலித்தவரை என்பதுதான் பார்ப்பனியம் என்பார். அது இன்று வரையில் உண்மையாகத்தான் இருக்கிறது!

ஒருவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதும், இன்னொருவரை அமைச்சராக நியமிப்பதும் ஆளுநருக்கு உரிய அதிகாரங்கள் என்றால், பிறகு முதலமைச்சர் எதற்காக? அரசே எதற்காக? எல்லாவற்றையும் ஆளுநர் பார்த்துக் கொள்வார் என்பது அடாவடித்தனமும், அராஜகமும் ஆகும்!

அது மட்டுமல்லாமல், செந்தில் பாலாஜி அமைச்சராக நீடித்தால் சாட்சிகளைக் கலைத்து விடுவார் என்கிறார். செந்தில் பாலாஜியின் மீதான குற்றச்சாட்டு என்ன, குற்றப் பத்திரிகை எப்போது தாக்கல் செய்யப்படும், சாட்சிகளாக யார் நிறுத்தப்பட இருக்கிறார்கள் என்று எதுவும் தெரியாத நிலையில், தமிழ்நாட்டு ஆளுநர் தன்னைத்தானே தலைமை நீதிபதியாகக் கருதிக் கொண்டு இப்படி அறிவித்திருக்கிறார்.

அமைச்சரை நீக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு என்றால், புதிய அமைச்சரை நியமிக்கும் அதிகாரமும் அவருக்கு உண்டா? அப்படியானால் இன்று மாலையே வானதி சீனிவாசன்தான் (ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்குத் துணையாக) தமிழ்நாட்டின் புதிய நிதி அமைச்சர் என்று அவர் அறிவித்து விட முடியுமா?

அவரைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்த ஒன்றிய அரசே இந்தக் கோமாளித்தனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், அவர் ஆணையை அவரே திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளது!

அவமானங்களைச் சுமந்து வாழ்வதற்கு ஆளுநர் கூச்சப்படாமல் இருக்கலாம். ஆனால் அவரை ஆளுநராக ஏற்றுக் கொள்வதற்குத் தமிழ்நாடு கூச்சப்படுகிறது!


எனவே இந்த ஆளுநரை உடனே திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழகம் போர்க்கோலம் பூண்டு எழவேண்டும்! கட்சி வேறுபாடுகளைக் கடந்து, ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைவரும் ஒன்று திரண்டு, அறப்போராட்டங்களை நடத்தி ஆளுநரை வெளியேற்றியே தீர வேண்டும்!!

●

# மோடியின் அமெரிக்கப் பயணம் ஓர் அலங்கோலம்!

மா.உதயகுமார்





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் அமெரிக்காவிற்குச் சென்று வந்தார். 20 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு விசா மறுக்கப்பட்டவர் அவர் என்பது வரலாறு. காலங்கள் மாறி மோடி இந்தியாவின் பிரதமரான பிறகு அமெரிக்கா சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கிறது.

இந்தியாவில் நரேந்திர மோடிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து கூட்டணி அமைக்க ஆலோசித்து வருகின்றனர். பாஜகவை எதிர்த்து இணைய முடியாதவர்கள் எல்லாம் இணைய வேண்டும் என்று பார்ப்பனர் தவிர்த்த அனைத்துத் தரப்பினரும் விரும்புகிறார்கள் என்றால், இந்த ஒன்பது ஆண்டுகால ஆட்சி எந்த அளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

உள்நாட்டில் மனித உரிமை மீறல், ஜனநாயகப் படுகொலை, மதவாதம் எனப் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் மோடி அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு விசா மறுத்த அதே நாடு இப்போது வரவேற்கிறது என்றால், அந்த நாட்டினருக்கு இருக்கும் அரசியல் நிர்பந்தம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். சீனாவையும் இரஷ்யாவையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை அவர்களுக்கு. அது அந்த நாட்டின் அரசியல். நாம் அதில் பேசுவதற்கு ஒன்றுமில்லை.

வியப்பு என்னவென்றால் அந்த நாட்டின் எதிர்க்கட்சி கூட அல்ல ஆளுங்கட்சியான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த, அதுவும் முன்னாள் அதிபரான பராக் ஒபாமா அவர்களே மோடி ஆட்சியில் சிறுபான்மையினர் உரிமை கேள்விக்குள்ளாகி இருப்பதைச் சுட்டிக்காட்டி CNN என்னும் பிரபல ஊடகத்திற்குப் பேட்டியளித்ததுதான்.

பாஜகவுக்கும் நரேந்திர மோடிக்கும் எதிராக கருத்துச் சொல்பவர் எல்லாம் ஆன்ட்டி இந்தியர்கள் என்றும் அவர்களுடைய மத அடையாளத்தை வைத்து இந்து விரோதிகள் என்றும் அடையாளப்படுத்துவது இந்தியாவில் இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் வழக்கமான ஒன்றாக இருக்கிறது. இங்குள்ளவர்களுக்கு இது பழகி போனது. இன்று அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவையும் அதேபோல் அவருடைய பெயரில் இருக்கக்கூடிய “உசைன்” என்பதைச் சுட்டிக்காட்டி, அதனால்தான் அவர் மோடியை விமர்சிக்கிறார் என்று இப்போது பாஜகவினர் சொல்லத் தொடங்கிவிட்டனர். இதைத் தொடங்கியது, பெயர் தெரியாத சமூக ஊடகத்தினர் அல்ல, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் - அசாம் மாநிலத்தின் பாஜக முதல்வர் ஹிமான்தா பிஸ்வா சர்மா. ஒபாமாவின் கூற்று எவ்வளவு மெய் என்பதை ஓரிரு நாள்களிலேயே பாஜகவினர் மெய்ப்பித்து விட்டார்கள்.

இந்தியாவில் மோடி ஆட்சியில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை ஆய்வுகளாக, புள்ளி விவரங்களோடு வெளியிட்டு வந்த அமெரிக்கா, அய்ரோப்பாவைச் சேர்ந்த சில நிறுவனங்களும் இது போன்ற அவதூறுகளுக்கு உள்ளாகின. அதைச் செய்தது பாஜகவின் தகவல் தொழில்நுட்ப அணியோ, சங்க் பரிவார அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ அல்ல, இந்தியாவினுடைய குரலாக ஒலிக்கக் கூடிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர்தான்.

அதே வழியில் அமெரிக்காவின் ஆளுங்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அதிபர் ஒபாமாவையும் இன்று நிதி அமைச்சரும், பாதுகாப்புத் துறை அமைச்சரும், மற்ற பாஜகவினரும் அவதூறு செய்கிறார்கள். இந்தியாவில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்காவில் பத்திரிக்கையாளர் சந்திப்பில் மோடியிடம் கேள்வி எழுப்பிய, *Wall Street Journal* எனும் பத்திரிக்கையைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் சப்ரினா சித்திக்கையும் தொடர்ந்து இதே போன்று தாக்கி வருகின்றனர். இதை அமெரிக்க அரசே கண்டித்திருக்கிறது.

இந்தியாவில் உள்ள அரசியல் தலைவர்களையும் பத்திரிக்கையாளர்களையும் மத அடையாளத்தைப் பயன்படுத்தித் தாக்கி வந்த பார்ப்பன, பாஜக, சங்க் பரிவார கும்பல், இந்திய எல்லையைக் கடந்து தங்களை எதிர்ப்பவர்களை எல்லாம் மத அடையாளத்தைக் கொண்டு அவதூறு பரப்பும் மட்டமான அரசியலை உலக அரங்கில் அரங்கேற்றி வருகின்றன.

சிறுபான்மையினர் உரிமை பறிக்கப்படுவது குறித்து ஒபாமா பேசியிருக்கிறார். அவர் வெளிநாட்டுக்காரர். அவருக்கு இவ்வளவுதான் தெரிந்திருக்கிறது. உள்ளூர்க்காரர்களான நமக்குத்தானே மொத்த உண்மையும் தெரியும். இந்தியாவில் சிறுபான்மையினர் உரிமை மட்டும் பறிக்கப்படவில்லை. இந்துக்கள் என்று நம்பவைக்கப் பட்டிருக்கும் பார்ப்பனர் அல்லாதார் அனைவருடைய உரிமையும் முன்னேற்றமும் இந்த ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் பாதிப்பு அடைந்திருக்கிறது. அதனால்தான் பார்ப்பனர்கள் மோடியின் ஆட்சி தொடர வேண்டும் என்று யாகம் நடத்துகிறார்கள், தொடர்ந்து உலக நாடுகளுடனும், பெரு நிறுவனங்களுடனும் தரகு வேலை பார்த்துவருகிறார்கள். இந்த அமெரிக்கப் பயணமும் அப்படிப்பட்ட ஒன்றுதான்.

கோலாகலமாகக் காட்டப்பட்ட மோடியின் அமெரிக்கப் பயணம் உண்மையில் அலங்கோலமானது! ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## அறங்காவல் துறையின் கீழ் தில்லை..?

வள்ளலாரைச் சூத்திரர் என்று கோயிலுக்குள் நுழைய விடாமல் தில்லைக் கோயிலுக்கு வெளியே நிறுத்தினார்கள், தீட்சிதர்கள்.

அதனால் தில்லைக்கு எதிராக 'சத்திய ஞான சபை'யை நிறுவினார் அவர்.

நந்தனைச் சூத்திரன் என்று, நடராசரை வணங்க கிழக்கு வாசல் வழியாக கோயிலுக்குள் நுழைந்ததால் இன்றுவரை அந்தத் தீண்டாமைக் கதவு மூடியே இருக்கிறது.

கனகசபையேறி தேவாரம் பாடச் சென்ற சிவனடியார் தீட்சிதர்களால் தாக்கப்பட்டுள்ளார். பெண்கள் அவமதிக்கப் படுகிறார்கள், தீட்சிதர்களால்.

தொடர்ந்து கனகசபை மீதேறி தமிழ் பாடத் தடை செய்வதும், பதாகை வைப்பதும் தீட்சிதர்கள் தாம்.

அவர்களுக்கு ஆதரவாக பா.ஜ.க. வரிந்து கட்டிக் கொண்டு வந்து நிற்கிறது.

பழனி மலையிலும் 'இந்துக்கள்... ' என்று பதாகை வைத்து குழப்பத்தை ஏற்படுத்துகிறது கோயிலின் பார்ப்பன நிர்வாகம். இங்கேயும் எச்.ராஜா போன்ற இந்து அடையாளவாத அரசியல் சக்தி முகத்தை நீட்டுகிறது.

2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நெருங்குவதால் மோடி அரசின் மக்கள் விரோத செயல்களை மக்களிடம் இருந்து திசை திருப்ப ஒரே சிவில் சட்டம் என்று மோடி பேசுகிறார்.

தமிழ்நாட்டில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான ஆட்சிமீது குறைசொல்ல முடியாததால், கோயில்களின் பின்னால் பா.ஜ.க வின் அரசியல் இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.



சட்டத்தை மதிக்காமலும், காவல் துறையை மதிக்காமலும், அறங்காவல் அதிகாரிகள் அனைவருக்கும் எதிராக நிற்பவர்கள் தீட்சிதர்கள் என்றும், தமிழ்நாடு அரசு சிதம்பரம் கோயிலை அறங்காவல் துறையின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் இருப்பதாகவும் அமைச்சர் சேகர்பாபு சொல்லியிருக்கிறார்.

இதற்கான சட்டத்தை இயற்றினால் அதில், ஆளுநர் ஆர்.என்.ரவி கையெழுத்திடாமல் கிடப்பில் போட்டு விடுவார்.

அதனால் ஆளுநரைப் பதவி விலகச் செய்து விட்டு, தில்லை நடராசர் கோயிலை அறங்காவல் துறையின் கீழ் கொண்டு வர வேண்டும்.

அதற்கான, பலமான கருவி 2024 பொதுத் தேர்தல். அத்தேர்தலில் மதத்தின் போர்வையிலுள்ள பா.ஜ.க.வை மக்கள் தோற்கடித்தே ஆக வேண்டும்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**

தொலைபேசி: 044-2472 6408



காஞ்சி மாவட்டம், செம்பாக்கம், காமராஜபுரத்தில் முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டுப் பகுதித் தி.மு.கழகம் 24-06-2023 அன்று நடத்திய பொதுக்கூட்டத்தில் பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். தோழர்கள் எழில்.இளங்கோவன், இக்லாஸ், இரா.விஜயலட்சுமி, இளமாறன், கமலக்கண்ணன், தாம்பரம் இளங்கோ, அன்பு உள்ளிட்டோர் பொதுச் செயலாளரை வரவேற்றனர்.



திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் சென்னை, தேனாம்பேட்டை அன்பகம் அரங்கில் 30-06-2023 அன்று மணிப்பூர் குறித்தக் கருத்தரங்கம் நடைபெற்றது. "பாஜக ஆட்சியில் பற்றி எரிகிறது மணிப்பூர்" என்ற தலைப்பில், மணிப்பூரின் இன்றைய நிலையையும், அரசியலையும் எடுத்துரைத்து விளக்கவுரை ஆற்றினார் திரு. சசிகாந்த் செந்தில் I.A.S. இக்கருத்தரங்கில் தோழர்கள் சுப.வீரபாண்டியன், 'பெல்' ராஜன், ஆ.லாரன்ஸ், எட்வின், இக்லாஸ், சாரதாதேவி, திராவிடமணி, முத்தையா குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பெரியாருக்குச் செய்யும் துரோகம்...!

வெற்றிச்செல்வன்

கலைஞர் தன்னுடைய இளமைக் காலத்தில் தந்தை பெரியாரின் 'குடிஅரசு' இதழில் பணிபுரிந்தவர். பெரியாரின் கொள்கைப் பட்டறையில் குறுவாளாய்ப் பட்டை தீட்டப்பட்டவர். பெரியாரின் பாடங்கள் அவருக்கு வாழ்நாள் முழுவதும் துணை நின்றன. பெரியாரின் கொள்கைகளைச் சட்டமாக்கிச் செயல்படுத்தும் முயற்சியை அண்ணா புள்ளி வைத்துத் தொடங்கினார். கலைஞரோ புள்ளியை வைத்துக் கொண்டு புரட்சிக் கோலம் போட்டார்.



"குடிஅரசு அலுவலகக் குருகுலத்தில்

கொள்கைவழிப் பாடங்கள் பயின்றகாலை நான்

தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும் எனைவளர்த்த

தந்தைக்கு அரசுமரியாதையுடன் இறுதிவணக்கம் செய்வேன் என்றும்

எண்ணியும் பார்த்ததில்லை"

என்று தமது இளமைக் காலத்தை, பெரியார் இறந்தபோது பதிவு செய்தவர் கலைஞர்.

பெரியார் அமைத்த கருஞ்சட்டைப் படையின் முதல் உறுப்பினராகத் தன்னுடைய பெயரைப் பதிவு செய்து கொண்டவர் அல்லவா கலைஞர் ! பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றுவதில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்ற கலைஞர், பெரியார் சொன்ன கருத்துகளை நாம் உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது உண்மையானால், அவைகளை நாம் செயலிலே காட்டியே ஆக வேண்டும்; நாம் ஏற்றுக் கொண்ட கருத்துக்களுக்காவது நாம் மனசாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பேசுகிறார். பேசியது தோழர் ஆனைமுத்து அவர்களின் ஈ. வெ. ரா. பெரியார் சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழாவில்.

அது மட்டும் அன்று; கொண்ட கொள்கையில் உறுதி இல்லாமல், குடும்பம், உறவினர் என்று காரணம் கூறித் தப்பித்துக் கொள்பவர்களைக் கடுமையாகச் சாடுகிறார், கலைஞர்.

"பெரியார் அவர்களுடைய கருத்துகளை ஏற்றுக் கொண்டிருக்கிற இளைஞர்கள், வீட்டிலே இருக்கிறவர்கள் ஒத்துழையாமையின் காரணமாக, நான் என்ன செய்வது? சுயமரியாதைத் திருமணம் செய்து கொள்ளத்தான் ஆசை. கொஞ்சம் வீட்டில் இருப்பவர்களுக்காக நேரம் பார்த்து நடத்த வேண்டியிருக்கிறது, பஞ்சாங்கம் பார்த்து நடத்தவேண்டியிருக்கிறது என்று வீட்டிலே இருப்பவர்களைச் சாக்குச் சொல்லி, இன்றைக்குப் பெரியாருடைய கருத்துகளை மனதிலே பதிய வைத்துக் கொண்டிருக்கிற இளைஞர்கள்கூட தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். இது பெரியாருக்குச் செய்யப்பட்ட துரோகம் என்பதை மாத்திரம் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்" என்கிறார் கலைஞர்.

கலைஞரைப் பின்பற்றுபவர்கள் அவருடைய அறிவுரைக்குச் செவிமடுத்துச் செயலாற்ற வேண்டும். கலைஞரின் உடன்பிறப்புகள் அவருடைய அறிவுரையைப் புறந்தள்ளுவது என்பது, பெரியாருக்கு மட்டுமன்று, கலைஞருக்கும் செய்யும் துரோகமாகும். ●

## கோவையில் போராட்டம்...



அமலாக்கத்துறை நடவடிக்கையைக் கண்டித்து, நேற்று தோழர் காசு நாகராசன் தலைமையில் கோவையில், போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் நம் வாழ்த்துக்கள்! பேரவையின் நடவடிக்கைகளில் ஒரு போர்க் குணத்தைக் கோவை நண்பர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எழுச்சியும், உணர்ச்சியும் மிக்க இவை போன்ற நடவடிக்கைகளே மென்மேலும் நம் இயக்கத்தை வளர்க்கும், இளைஞர்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கும்! எனவே மீண்டும் ஒருமுறை என் அன்பையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

சுப.வீரபாண்டியன்
(பொதுச் செயலாளர்)

## வேலூரில் ஆலோசனை



கடந்த இரண்டு நாள்களாக, வேலூர் மாவட்டத்தில் தொடர் சுற்றுப்பயணம் நடத்தி, பல்வேறு தரப்பினரையும் சந்தித்து, ஜூலை 9 மாநாட்டிற்கு அணி திரட்டும் பணியில் ஈடுபட்டோம். இரண்டு நாள் அலைச்சலே சற்று களைப்பைத் தந்தது என்றால், இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து இப்பணியில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டிருக்கும் தோழர் சிங்கராயரின் பணியை எண்ணி வியக்கின்றேன்! மாநாடு நமக்குப் பெரும் வெற்றியாகவும், நம் இயக்கத்திற்கான திருப்புமுனையாகவும் அமையும். தோழர்கள் அனைவரும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சுப.வீரபாண்டியன்
(பொதுச் செயலாளர்) ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian